**<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி</u>**
<u>முன்னிலை : திரு.N.பாரதிராஜன், பி.ஏ., பி.எல்.,</u>
**<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC), பொள்ளாச்சி</u>**

<u>2024 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 03 ஆம் நாள் புதன்கிழமை</u>
**<u>இ.ம.எண்.12/2024 இன் அ.வ.எண்.112/2021</u>**

S.விஷ்ணுராம்குமார் ... மனுதாரர்/ வாதி

/ எதிர் /

1) தேவகிருஷ்ணகுமார் ... 1ம் எதிர்மனுதாரர்/ பிரதிவாதி

2) செல்வபிரியா ... 2ம் எதிர்மனுதாரர்/ பிரதிவாதி

இம்மனுவானது கடந்த 28.03.2024ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு மனுதாரர்/ வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.R.சுசீந்திரன் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.A.R.ஹரிபிரசாத் அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பிலும் எடுத்துரைக்கப்பட்ட வாதங்களின்படியும், ஆவணங்களின்படியும், இந்நீதிமன்றம் இன்று வழங்கிடும் கீழ்க்கண்ட...

**<u>ஆணையுரை</u>**

அ.வ.எண்.112/2021 வழக்கை இந்நீதின்றத்தில் நிலுவையில் உள்ள மற்றொரு வழக்கான அ.வ.எண்.163/2023 வழக்குடன் சேர்ந்து விசாரணை நடத்த (Joint Trial) உரிய உத்தரவு பிறப்பிக்ககோரி உரிமையியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 151–ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2)** இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் வாதியும், அ.வ.எண்.163/2023 வழக்கில் பிரதிவாதியும் ஆவார். அ.வ.எண்.112/2021 மற்றும் அ.வ.எண்.163/2023 வழக்கின் தரப்பினர்களும், இருவழக்கின் சொத்து விபரம் மற்றும் பிரசனையும் ஒன்றாகும். இரு வழக்குகளையும் தனித்தனியாக விசாரித்தால் மாறுபட்ட தீர்ப்பு ஏற்படுவதுடன், பலதரப்பட்ட வழக்கு

நடவடிக்கைகளுக்கு காரணமாக அமையும். எனவே, இருவழக்குகளையும் இணைந்து நடத்த (Joint Trial) கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) **எதிர்மனுதாரர்கள் தரப்பில்,** மேற்படி இருவழக்கின் சங்கதிகளும் ஒன்று. எதிர்மனுதாரர் அ.வ.எண்.163/2023 வழக்கை நிரந்தர உறுத்துக்கட்டளை மற்றும் விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் இவ்வழக்கை நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார். மேலும், அ.வ.எண்.411/2016 வழக்கில் வழங்கிய தீர்ப்பிற்கு எதிராக அசல் வழக்கில் திருத்தம் கோரி மனுதாரர் இ.ம.எண்.07/2023 தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது. ஆகவே, மனுதாரர் தாக்கல் செய்துள்ள அ.வ.எண்.112/2021 வழக்கு உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 23 விதி 3(A)–ன்படி தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குரையை நிராகரிக்கவேண்டி எதிர்மனுதாரர் மனுதாக்கல் செய்யவுள்ளார். எனவே, மனுசெலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும்.

4) இரு தரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

5) இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

6) <u>**பிரச்சனை:**</u>

இரு தரப்பிலும் எடுத்துரைக்கப்பட்ட சங்கதிகள் மற்றும் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு மற்றும் எதிருரை ஆகியவற்றை இந்நீதிமன்றம் தீர பரிசீலனை செய்ததில், அ.வ.எண்.112/2021 மற்றும் அ.வ.எண்.163/2023–ல் கண்ட தரப்பினர்கள், சொத்துவிபரங்கள்கள் மற்றும் பிரச்சனைக்குரிய சங்கதி ஆகியவை ஒன்றாக உள்ளது என்பது தெரியவருகிறது. எதிர்மனுதாரர் தரப்பிலும் மேற்கண்ட சங்கதி ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. எனினும், அ.வ.எண்.112/2021 ல் இ.ம.எண்கள்.02/2021, 05/2022, 07/2023

நிலுவையில் உள்ளது. அ.வ.எண்.163/2023–ல் இ.ம.எண்கள்.02/2023 மற்றும் 03/2023 நிலுவையில் உள்ளது. மேற்கண்ட இடைநிலை மணுக்களை முடிவுசெய்தால் மட்டுமே இருவழக்குகளிலும் விசாரணை தொடங்க முடியும். அவ்வாறு விசாரணை தொடங்கும் சமயத்தில் இருவழக்குகளை ஒன்றாக விசாரிப்பது சரியாக இருக்கும் என்றும், இந்த சூழ்நிலையில் இம்மனுவை அனுமதிக்க போதிய முகாந்திரங்கள் இல்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

முடிவில், இம்மனு தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வாணையுரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்து பிழை நீக்கம் செய்யப்பட்டு 2024ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 03ம் நாளான இன்று என்னால் அவையறிய பகரப்பட்டது.

**(ஒப்பம்)/– N. பாரதிராஜன்**
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),
பொள்ளாச்சி.

**மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் பட்டியல்:**

– இல்லை. –

**(ஒப்பம்)/– N. பாரதிராஜன்**
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),
பொள்ளாச்சி.

---------------------------------------------------

**அசல் ஆணையுரை**

இ.ம.எண்.12/2024 இன்

அ.வ.எண்.112/2021

நாள் : 03.04.2024

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,

பொள்ளாச்சி.

---------------------------------------------------